## சின்ன சின்னதாய்

### ரவுடி சீசிங் ராஜா தொடர்புடைய 14 இடங்களில் போலீஸார் திடீர் சோதனை

**சென்னை**

கிழக்கு தாம்பரத்தில் வசித்து வந்தவர் சீசிங் ராஜா(51). இவர் மீது கொலை உள்ளிட்ட 39 வழக்குகள் உள்ளன. இந்நிலையில், வேளச்சேரி போலீஸார் அவரை கடந்த செப்டம்பர் மாதம் ஆந்திராவில் கைது செய்து சென்னை அழைத்து வந்தனர். பின்னர், அவர் என்கவுன்ட்டர் மூலம் கொல்லப்பட்டார்.

இதற்கிடையே சீசிங் ராஜாவால் பாதிக்கப்பட்ட தொழில் அதிபர்கள், தொழில் நிறுவன உரிமையாளர்கள், பொதுமக்கள் என பல தரப்பினர் தங்களது சொத்துகளை மீட்டுத் தர வேண்டும் என தாம்பரம் காவல் ஆணையரிடம் அடுத்தடுத்து புகார் அளித்தனர்.

இதையடுத்து தாம்பரம் காவல் ஆணையர் அபின் தினேஷ் மோடக் உத்தரவுப்படி, பள்ளிக்கரணை காவல் துணை ஆணையர் கார்த்திகேயன் தலைமையில் 14 காவல் ஆய்வாளர்கள் உட்பட 200 போலீஸார் அடங்கிய தனிப்படை போலீஸார், வருவாய்த் துறை அதிகாரிகள் உதவியுடன் சீசிங் ராஜாவுக்கு சொந்தமான வீடுகள், அவரது உறவினர்கள், நண்பர்கள் வீடு, அலுவலகம் என 14-க்கும் மேற்பட்ட இடங்களில் நேற்று சோதனை நடத்தினர். இச்சோதனையில் பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்து பத்திரங்கள், ரியல் எஸ்டேட் தொடர்பான முக்கிய ஆவணங்கள், வங்கி இருப்பு தொகை விவரங்கள் உள்ளிட்டவற்றை பறிமுதல் செய்து அதிகாரிகள் ஆய்வு செய்து வருகின்றனர்.

### அரசு மருத்துவமனை உணவகங்களில் உணவு பாதுகாப்பு அதிகாரிகள் ஆய்வு

**சென்னை**

அரசு மருத்துவமனைகளில் செயல்படும் உணவகங்கள் குறித்து பெறப்பட்ட புகார்களின் அடிப்படையில் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறை மாநில ஆணையர் ஆர்.லால்வேனா, தமிழகம் முழுவதும் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைகளின் உணவகங்களை ஆய்வு செய்ய உத்தரவிட்டுள்ளார். அதனடிப்படையில் சென்னை மாவட்ட உணவு பாதுகாப்புத் துறை நியமன அதிகாரி சதீஷ்குமார் குழுவினர் சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் நேற்று சோதனையிட்டனர்.

அதன்படி மருத்துவமனையில் உள்ள 6 உணவகங்களில் எவ்வாறு உணவுகள் தயார் செய்யப்படுகின்றன. உணவு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் உணவகங்கள் முறையாக பராமரிக்கப்படுகின்றனவா என்பது குறித்து ஆய்வு நடத்தப்பட்டது. சோதனையில் சில உணவகங்களில் பிளாஸ்டிக் மற்றும் தடைசெய்யப்பட்ட பேப்பர் கப்புகள் பயன்படுத்தப்படுவது கண்டறியப்பட்டு, அவற்றை தவிர்க்குமாறு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. மேலும் உணவகங்களை மேம்படுத்தவும் உணவு பாதுகாப்புத் துறை சார்பில் அறிவுரைகள் வழங்கப்பட்டன.



பள்ளிக்கல்வித் துறை பொது நூலக இயக்ககம் சார்பில் சென்னை, அண்ணா நூற்றாண்டு நூலக கூட்ட அரங்கில் நடைபெற்ற 'டாக்டர் எஸ்.ஆர்.அரங்கநாதன் விருது' வழங்கும் விழா மற்றும் சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழா 2025 அறிமுக விழாவில், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் நூலகர்களுக்கு டாக்டர் எஸ்.ஆர்.அரங்கநாதன் விருதுகளையும், சிறந்த நூலகங்கள் மற்றும் வாசகர் வட்டங்களுக்கு கேடயங்களையும் வழங்கினார். நிகழ்ச்சியில் துறை செயலாளர் சோ.மதுமதி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக தலைவர் ஐ.லியோனி, பொது நூலக இயக்குநர் முனைவர் பொ.சங்கர், சென்னை மாநகர நூலக ஆணைக் குழுத் தலைவர் கவிஞர் மனுஷ்யபுத்திரன், இணை இயக்குநர் சங்கர சரவணன் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ரஷ்ய அரசு பெயரில் ரூ.2,000 கோடி முதலீடு பெற்று தருவதாக

# சென்னை தொழிலதிபரிடம் ரூ.7.32 கோடி மோசடி

**9 பேர் கைது; 476 பவுன் தங்கம், 11 சொகுசு கார்கள் பறிமுதல்**

**சென்னை**

ரஷ்ய அரசு பெயரில் ரூ.2000 கோடி முதலீடு பெற்றுத் தருவதாக கூறி சென்னை தொழில் அதிபரிடம் ரூ.7.32 கோடி பணம் பெற்று மோசடி செய்த வழக்கில் வட்டாட்சியர் உட்பட 9 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதுகுறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது:

சென்னை தி.நகரைச் சேர்ந்த பிரபல தொழில் அதிபர் ஒருவர் சென்னை காவல் ஆணையர் அலுவலகத்தில் அண்மையில் புகார் ஒன்று அளித்தார். அதில், "சென்னை ஆழ்வார்பேட்டையில் இந்தோ - ரஷ்யன் அசோசியேட் என்ற பெயரில் நிறுவனத்தை நடத்தி வருபவர் அருண்ராஜ்(38). இவர் ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள ஆலிவ் பீச்சில் வசிக்கிறார். இவர் இந்தோ-ரஷ்யன் தொழில் கூட்டமைப்பின் பிரதிநிதி என்று கூறி என்னிடம் அறிமுகமானார்.

மேலும், ரஷ்ய அரசு இந்திய திட்டங்களுக்காக கோடிக்கணக்கில் பணம் முதலீடு செய்ய முன் வந்துள்ளது. திருச்சியில் நான் நடத்தி வரும் வியாபார திட்டத்துக்கு ரூ.2 ஆயிரம் கோடி வரை முதலீடு பெற்றுத் தருவதாகவும் ஆசை வார்த்தை கூறினார். இதற்கு அவர் கமிஷனாக என்னிடமிருந்து ரூ.7 கோடியே 32 லட்சத்து 45,000 பெற்றுக் கொண்டார். மேலும், எனது நிறுவனத்தில் ரஷ்ய நிறுவனம் முதலீடு செய்துள்ளதாக போலியான ரஷ்ய அரசின் லோகோ, கொடிகள் மற்றும் தகவல்களை காண்பித்தார். அவை போலி என்பது பின்னர்தான் தெரிய ஆரம்பித்தது. அருண்ராஜையும், அவரது கூட்டாளிகளையும் தொடர்பு கொண்டபோது தொடர்பு கொள்ள முடியவில்லை. எனவே, என்னிடம் மோசடி செய்த அனைவர் மீதும் நடவடிக்கை எடுக்க வேண்டும்" என புகாரில் தெரிவித்து இருந்தார்.

இதுகுறித்து மத்திய குற்றப் பிரிவு போலீஸார் விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டது. அதன்படி, அப்பிரிவு கூடுதல் காவல் ஆணையர் ராதிகா மேற்பார்வையில் உதவி ஆணையர் சிவா, காவல் ஆய்வாளர் ராஜேஷ் கண்ணா அடங்கிய தனிப்படை போலீஸார் விசாரணை மேற்கொண்டனர். இதில், புகாரில் குறிப்பிட்டிருந்த அனைத்தும் உண்மை என தெரியவந்தது. இதையடுத்து மோசடிக்கு மூளையாக செயல்பட்டு தலைமறைவாக இருந்த அருண்ராஜ், அவரது கூட்டாளிகள் தஞ்சாவூர் மாவட்டம் புதுக்கோட்டை குமாரன் (43), சோழவரம் நாகேந்திரன் (39) ஆகியோரை கைது செய்தனர். அவர்களிடமிருந்து 476 பவுன் தங்கம், 400 கிலோ வெள்ளிப் பொருட்கள், ரூ.14.50 லட்சம் ரொக்கம், 11 சொகுசு கார்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

முன்னதாக அருண்ராஜ் கூட்டாளிகளான மதன் குமார், ஓய்வு பெற்ற விஏஓ தர்மன், ரூபா, விக்னேஷ்வரன், டாஸ்மாக் பிரிவு வட்டாட்சியர் விஸ்வநாதன், சசிகுமார் ஆகிய மேலும் 6 பேர் கைதாகினர். தொடர்ந்து விசாரணை நடைபெறுகிறது.



விஸ்வநாதன், மதன் குமார், தர்மன், ரூபா, விக்னேஷ்வரன்



சசிகுமார், அருண்ராஜ், குமாரன், நாகேந்திரன்

### கத்திக்குத்தில் காயமடைந்த கிண்டி மருத்துவர் பாலாஜி வீடு திரும்பினார்

**சென்னை**

சென்னை கிண்டியில் உள்ள கலைஞர் நூற்றாண்டு நினைவு உயர் சிறப்பு மருத்துவமனையில் கடந்த 13-ம் தேதி விக்னேஷ் என்ற இளைஞர், புற்றுநோய் மருத்துவ நிபுணர் மருத்துவர் பாலாஜியை 7 இடங்களில் சரமாரியாக கத்தியால் குத்தினார். இதில் படுகாயமடைந்த மருத்துவர் பாலாஜி, தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டார். கத்தியால் குத்திய இளைஞரை போலீஸார் கைது செய்தனர்.

மருத்துவர் பாலாஜிக்கு பல்துறை மருத்துவ குழுவினர் சிகிச்சை அளித்தனர். உடல்நிலையில் முன்னேற்றம் ஏற்பட்டதால், மருத்துவர் பாலாஜி நேற்று வீடு திரும்பினார். இது தொடர்பாக மருத்துவமனை இயக்குநர் பார்த்தசாரதி கூறும்போது, "மருத்துவர் பாலாஜி நலமுடன் உள்ளார். 6 வாரம் வரை விடுப்பு கேட்டுள்ளார்" என்றார்.

**தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்**
முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகம்,
மண்டலத்தின் பெயர் - சென்னை (வடக்கு)
தொலைபேசி எண் - 044-28352439
மின்னஞ்சல் முகவரி - tncscnorth@gmail.com
CIN:U15137TN1972SGC006157

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான அறிவிப்பு**

**மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோப்பு ந.க.எண். M4/009884/2024** நாள் : 20.11.2024

மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள், தகுதிவாய்ந்த ஒப்பந்ததாரரிடமிருந்து கீழ்காணும் பணிக்கு தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்தின் முறைப்படி தமிழ்நாடு ஒளிவு மறைவற்ற ஒப்பந்தங்கள் சட்டம், 1998 மற்றும் விதிகள் 2000-க்குப்பட்டு இ - ஒப்பந்தங்கள் கோரப்படுகின்றது.

போக்குவரத்துக்கான போக்குவரத்து ஒப்பந்ததாரர்களை நியமனம் செய்ய தமிழ்நாடு முழுவதும் அமைந்துள்ள கூட்டுறவு / பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் இருந்து மாவட்டத்திற்குள் மற்றும் மாவட்டத்திற்கு வெளியே பல்வேறு சேமிப்பு மையங்கள் / சேமிப்பு கிடங்குகளுக்கு சாலை மார்க்கமாக சர்க்கரையை கொண்டு செல்வதற்கான இயக்கப் பணிகளை இரண்டு வருட காலத்திற்கு வழங்குதல்.

(மாறுதலுக்கு உட்பட்டதல்ல)

ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் மின்னனு ஒப்பந்தப்புள்ளிகளை www.tntenders.gov.in/nicgep/app இணையதளத்தின் மூலமாக மட்டுமே சமர்ப்பிக்கலாம். பிற அனைத்து விவரங்களையும் 21.11.2024 முதல் இணையதளத்தில் வெளியாகும் ஒப்பந்தப்புள்ளி ஆவணத்தில் பார்வையிடவும்.

The bidders have to participate online bidding only with Digital Signature Certificate (DSC) of Class-II or Class-III.

ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்க கடைசி நாள் / நேரம் - 11.12.2024 முற்பகல் 11.00 வரை.
ஒப்பந்தப்புள்ளி திறப்பு நாள் / நேரம் - 12.12.2024 முற்பகல் 11.30 வரை
ஒப்பந்த கலந்தாய்வு கூட்டம் நாள்/நேரம் - 22.11.2024 முற்பகல் 11.00
முதுநிலை மண்டல மேலாளர் அலுவலகம்
சென்னை (வடக்கு) மண்டலம்
கோபாலபுரம், சென்னை - 600 086.
முன்வைப்பு தொகை : ரூ. 1,00,000/- (ரூபாய் ஒரு லட்சம் மட்டும்) இணைய வழியாக செலுத்தவேண்டும்

முதுநிலை மண்டல மேலாளர்
தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம்
சென்னை (வடக்கு) மண்டலம்

செ.ம.தொ.இ./5014/ஒப்பந்தப்புள்ளி/2024

**பின்னி லிமிடெட்**
CIN: L17111TN1969PLC005736
பதிவு அலுவலகம் : 1, குக்ஸ் ரோடு, பெரம்பூர், சென்னை, தமிழ்நாடு - 600 012.
மின்னஞ்சல் : Liaison@binnyltd.in இணையதளம் : www.binnyltd.in

**பங்குதாரர்களுக்கான அறிவிப்பு**

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் வழங்கிய உத்தரவுக்கு இணங்க, OSA எண் 116/2024ல் உள்ள நவம்பர் 11, 2024 தேதியிட்ட சென்னை உத்தரவு எண் CMP எண் 24465/2024படி, கீழே கையொப்பமிட்ட நபர் நிறுவனத்தின் அன்றாட விவகாரங்களை மேற்பார்வையிடவும், செயல்படவும் நியமிக்கப்படுகிறார் மற்றும் அவர் பின்னி லிமிடெட் நிறுவனத்தின் இயக்குநர்கள் குழுவை நியமிப்பதற்காக பங்குதாரர்களின் கூடுதல் சாதாரண பொதுக் கூட்டத்தை (EGM) ஒருங்கிணைக்கும் தலைவராக செயல்படுவார். அதன்படி, தலைவர் அவர்கள் நிறுவனத்தின் வாரியத்தில் மேற்படி EGM கூட்டத்தை ஒருங்கிணைத்து அதனை மேற்பார்வை செய்யவும், 7 (ஏழு) நிர்வாகம் அல்லாத மற்றும் கட்டுப்பாடுடன் செயல்படக்கூடிய இயக்குநர்களை நியமிக்கவும் முடிவு செய்துள்ளார்.

2013ஆம் ஆண்டின் நிறுவனங்கள் சட்டத்தின் பிரிவு 160இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட வைப்புத்தொகையுடன் பரிந்துரைக்கப்பட்ட படிவம், 2014இன் Cos (இயக்குனர்களின் நியமனம் மற்றும் தகுதி) விதிகளுடன் படிக்கப்பட்டு, இயக்குநர்களாக நியமனம் பெற விரும்பும் நிறுவன உறுப்பினர்களிடமிருந்து கோரப்பட்டு, முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட படிவம் நிறுவனத்தின் பதிவு அலுவலகத்தில் கீழே கையொப்பமிடப்பட்டவரின் கவனத்திற்கும் மற்றும் இதன் நகல் ஒன்று மின்னஞ்சல் முகவரி binnylimitedegm2024@gmail.comக்கும் இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 14 (பதினான்கு) நாட்களுக்குள் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் நகல் நிறுவனத்தின் இணையதளத்தில் www.binnyltd.in இருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். ஆர்வமுள்ள விண்ணப்பதாரர்கள் / நிறுவனத்தின் உறுப்பினர்கள் இணையதளத்தில் சொல்லப்பட்டு இருப்பது போல் முன்மொழியப்பட்ட இயக்குனரின் தேவையான விவங்களுடன் வேட்புமனுவை அனுப்பலாம். பரிந்துரைப் படிவங்களைப் பெற்று, கீழே கையொப்பமிடப் பட்டவர்களின் ஆய்வுக்குப் பிறகு, நிறுவனங்கள் சட்டம், 2013இன் விதிகளின்படி EGM-க்கு அழைப்பு விடுக்கப்படும்.

பின்னி லிமிடெட்டிற்காக
இடம் : சென்னை
தேதி : 19.11.2024
மாண்புமிகு திரு. நீதிபதி எம். சத்தியநாராயணன்
ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி, சென்னை

# போதைப் பொருள் விற்றதாக அயனாவரம் காவலர் கைது

**பணியிடை நீக்கம் செய்து காவல் ஆணையர் உத்தரவு**

**சென்னை**

போதைப் பொருள் விற்பனை விவகாரத்தில் சென்னையை சேர்ந்த காவலர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதுகுறித்து போலீஸ் தரப்பில் கூறப்படுவதாவது:

மெத்தம்பெட்டமைன் என்ற விலை உயர்ந்த போதைப் பொருள் கடத்தல் கும்பலை சென்னை தெற்கு மண்டல அதிதீவிர குற்றத் தடுப்பு பிரிவு போலீஸார் அண்மையில் பெங்களூருவில் கைது செய்தனர். கைதானவர்கள் கொடுத்த தகவலின்பேரில் தூத்துக்குடி, உடன்குடியை சேர்ந்தவரும் சென்னையில் சமையல் கலைஞராக பணியாற்றுபவருமான ரகு என்பவர் பிடிபட்டார். அவர் கொடுத்த தகவலின்படி திருவண்ணாமலை மாவட்டம் ஆரணியை சேர்ந்த கண்ணன் கைதானார்.



காவலர் பரணி

இவர்கள் மொபைல் செயலி மூலம் பழக்கமான நபர்களிடம் போதை பொருட்களை வாங்கி, கூடுதல் விலைக்கு விற்று வந்துள்ளது விசாரணையில் தெரிய வந்தது. குறிப்பாக கண்ணன் பெங்களூருவில் உள்ள கேமரூன் நாட்டவரான ஜோனதான் என்பவரிடமிருந்து போதைப் பொருளை வாங்கி வந்து சென்னையில் கிராம் ரூ.1500-க்கும் மேல் விலை வைத்து விற்பனை செய்து வந்தது தெரியவந்தது.

ஆரணி கண்ணன் செல்போனை போலீஸார் ஆய்வு செய்தபோது சென்னை அயனாவரம் காவல் நிலையத்தில் சட்டம் ஒழுங்கு பிரிவில் காவலராக பணியாற்றும் பரணி என்பவருடன் அவர் அடிக்கடி செல்போனில் பேசியதும், ஜி-பே மூலம் பணப் பரிமாற்றத்தில் ஈடுபட்டதும் தெரிய வந்தது.

இதையடுத்து, காவலர் பரணியை விசாரித்தபோது, செயலி மூலம் கேரளாவை சேர்ந்த அபிஷேக் என்பவருடன் பழக்கம் ஏற்பட்டு, அவரிடமிருந்து போதைப் பொருளை வரவழைத்து விற்பனை செய்தது தெரிய வந்தது. இதையடுத்து, அவரை போலீஸார் கைது செய்தனர். மேலும், சென்னை மாநகர காவல் ஆணையர் அருண் உத்தரவுப்படி பரணி பணியிடை நீக்கம் செய்யப்பட்டார்.

selvakumar.m@hindutamil.co.in

முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி 107-வது பிறந்த நாள்

# தலைவர்கள் மலர் தூவி மரியாதை; உறுதிமொழி ஏற்பு

**சென்னை**

முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி 107-வது பிறந்த நாள் நேற்று கொண்டாடப்பட்டது. இதையொட்டி சத்தியமூர்த்தி பவனில் அவரது உருவப் படத்துக்கு தலைவர்கள் மலர்தூவி மரியாதை செலுத்தினர். தொடர்ந்து தேசிய ஒருமைப்பாட்டு தின உறுதி மொழியும் ஏற்கப்பட்டது.

முன்னாள் பிரதமர் இந்திராகாந்தி 107-வது பிறந்த நாளையொட்டி தமிழக காங்கிரஸ் சார்பில் சென்னை வால்டாக்ஸ் சாலையில் உள்ள இந்திராகாந்தி சிலைக்கு தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர்கள் கே.வி.தங்கபாலு, சு.திருநாவுக்கரசர் உள்ளிட்டோர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

**சத்தியமூர்த்தி பவனில்..**

பின்னர் தமிழ்நாடு காங்கிரஸ் தலைமையிடமான சத்தியமூர்த்தி பவனில் மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த இந்திராகாந்தி உருவப் படத்துக்கு தமிழக காங்கிரஸ் முன்னாள் தலைவர்கள் கே.வி. தங்கபாலு, சு.திருநாவுக்கரசர், மாநில துணைத் தலைவர் கோபண்ணா உள்ளிட்டோர் மலர்தூவி மரியாதை செலுத்தினர். அதையடுத்து தேசிய ஒருமைப்பாட்டு தின உறுதிமொழி ஏற்கப்பட்டது.

அதேபோல சத்தியமூர்த்தி பவனில் தமிழக காங்கிரஸ் இலக்கிய அணி சார்பில் அதன் தலைவர் பி.எஸ் .புத்தன் தலைமையில் இந்திராகாந்தி பிறந்த நாள் விழா கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்ச்சிகளில் தமிழக காங்கிரஸ் நிர்வாகிகள், கட்சித் தொண்டர்கள் கலந்துகொண்டனர்.

தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
திட்டங்கள் வட்டம், கோயம்புத்தூர்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.07/2024-25/முவஅ/நாள்: 15.11.2024**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ) திட்டங்கள் வட்டம், கோயம்புத்தூர், அவர்களால் **சேலம் (நெ), திட்டங்கள் கோட்டத்தைச்** சார்ந்த ஒரு பணிக்கு மட்டும் இணையதள வழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளி **10.12.2024 முற்பகல் 11.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **27.11.2024-ல்** இருந்து **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள்/மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**திட்டங்கள் வட்டம், கோயம்புத்தூர்.**
செ.ம.தொ.இ/5012/ஒப்பந்தப்புள்ளி/2024

தமிழ்நாடு அரசு
**நெடுஞ்சாலைத்துறை**
திட்டங்கள் வட்டம், கோயம்புத்தூர்
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
**ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண்.08/2024-25/முவஅ/நாள்: 16.11.2024**

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர்களின் சார்பாகவும் கண்காணிப்புப் பொறியாளர் (நெ) திட்டங்கள் வட்டம், கோயம்புத்தூர் அவர்களால், **கோயம்புத்தூர் (நெ) சிறப்பு திட்டங்கள்** கோட்டத்தைச் சார்ந்த ஒரு பணிக்கு மட்டும் இணையதள வழியில் மட்டுமே சதவீத ஒப்பந்தப்புள்ளி **10.12.2024 முற்பகல் 11.00 மணி வரை** வரவேற்கப்படுகிறது.

பணிகளின் விவரம், தோராய மதிப்பு, முன்வைப்புத் தொகை, ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் மற்றும் அனைத்து இதர விபரங்களை **26.11.2024-ல்** இருந்து **https://tntenders.gov.in** என்ற அரசு இணையதளத்தில் தெரிந்து கொள்ளலாம். ஏதேனும் திருத்தங்கள்/மாறுதல்கள் இருப்பின் மேற்குறிப்பிட்ட அரசு இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும் என்று தெரிவிக்கப்படுகிறது.

**கண்காணிப்புப் பொறியாளர் (நெ),**
**திட்டங்கள் வட்டம், கோயம்புத்தூர்.**
செ.ம.தொ.இ/5005/ஒப்பந்தப்புள்ளி/2024

